# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்)

**1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் 2011, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2010, திசெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ 73 ஆம் சட்டமூலம் ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கு புதிய உட்பிரிவொன்றை அறிமுகப்படுத்துகின்றது என்பதுடன் அறிமுகப்படுத்தப்பட்டவாறு புதிய உட்பிரிவின் சட்டப்பயனானது ஊழியர் மற்றும் தொழில்தருநரொருவருக்கு அடையாள இலக்கமொன்றை குறித்தொதுக்குவதற்குமாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கட்டிடம் கட்டியெழுப்பும் நோக்கத்திற்கு நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வதும் அத்துடன் உள்ளபடியான காலப்பகுதிக்கு தொங்கல் கணக்கிலுள்ள பணத்தொகைமீது வட்டி செலுத்துவதற்குமாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் உட்புகுத்தப்பட்ட பிரிவின் சட்டப்பயனானது நிதியத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்குமான வீடமைப்பு நலனுதவிகள் மற்றும் மருத்துவ சிகிச்சை தொடர்பிலான நலனுதவிகளை நீடிப்பதற்குமாகும்.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் உட்புகுத்தப்பட்ட அப்பிரிவின் சட்டப்பயனானது காப்புறுதித் திட்டமொன்றையும் ஓய்வூதியத் திட்டமொன்றையும் தாபிப்பதற்குமாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக சட்டப்பயனாவது இரண்டு சதவீதத்திற்கு மிகையிறுப்பனவை அதிகரிப்பதற்குமாகும்.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது ஆகக்குறைந்தது ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழியர்களைத் தனது ஊழியத்தில் கொண்டுள்ள தொழில்தருநர் ஒவ்வொருவர் மீதும் மாதாந்த திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்கான கடமையைச் சுமத்துதலுமாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனாவது முறையே குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டணையை அதிகரிப்பதற்குமாகும்.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் இது 5 ஆம் வாசகத்தால் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதுமாகும்.*

ச.வ.ஒ. 43/2008

## 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- *1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

> "(1அ) ஊழியரொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் உறுப்பினரொருவராகின்றபோது, தொழில் ஆணையாளர் தலைமையதிபதி விதித்துரைக்கப் பட்ட முறையொன்றில் அத்தகைய ஊழியர் மற்றும் தொழில் தருநருக்கு அடையாள இலக்கமொன்றை குறித்தொதுக்கு தல் வேண்டும்.".

**3**. முதன்மைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

> "(உஉ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக் கிணங்க, நிதியத்தின் பயன்பாட்டிற்கென, ஊழியர் சகாய நிதியத்தின் சார்பில் செயலக மொன்றை, அந்நோக்கத்திற்கென கொள்

2-PL 005507 - 650 (2011/02)

வனவுசெய்யப்பட்ட அல்லது நிதியத்திற்குச் சொந்தமான அல்லது நிதியத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் நிர்மாணிக்கப்படுவதற்கென அவசியமாக விருக்கக்கூடியவாறாக நிதியத்தின் பணங்களின் அத்தகைய தொகையை முதலீடு செய்யலாம்;"; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஊஊ) எனும் பந்தியில், "அத்தகைய மாற்றுத் தேதிக்கு முன்னரான ஆறு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான கணக்குகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கணக்குகள் அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 23அ ஆம் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"வீடமைப்பு நலனுதவிகளும் மருத்துவ சிகிச்சை தொடர்பிலான நலனுதவிகளும்.

23அ. (1) (அ) பத்து ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு நிதியத்திற்கு உதவுதொகையளித்துள்ளவரும் ;

(ஆ) தற்போது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் ; அத்துடன்

(இ) அவரது தனியாள் கணக்கில் அவரது வரவில் மூன்று இலட்சம் ரூபாவுக்குக் குறையாத தொகையை கொண்டுள்ளவருமான

நிதியத்தின் ஒவ்வொரு உறுப்பினரும்,

(i) வீடமைப்பு ; அல்லது

(ii) மருத்துவ சிகிச்சை,

*நோக்கத்திற்காக, அவரது தனியாள் கணக்கில் வரவிலுள்ள தொகையின் முப்பது சதவீதத்திற்கு மேற்படாத தொகையை மீளப்பெறுதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.*

*(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, அவரது கணக்கில் வரவிலுள்ள பணத் தொகையிலிருந்து மீளப்பெறுதலொன்றைச் செய்கின்ற நிதியத்தின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய மீளப்பெறுதல் தேதியிலிருந்து பத்து ஆண்டு காலப்பகுதியொன்று முடிவுறுவதன்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, மேற்கூறப்பட்ட நோக்கங்களில் ஏதேனுமொன்றிற்கென அத்தகைய தொகையின் முப்பது சதவீதத்திற்கு மேற்படாத தொகையை இரண்டாவது மீளப்பெறுதலொன்றாகப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.*

*(3) ஒவ்வொரு உறுப்பினரும், அவர் நிதியத்தின் உதவுதொகை செலுத்துநரொருவராக இருக்கின்ற காலப்பகுதியின்போது அவரது தனியாள் கணக்கிலிருந்து இரு மீளப்பெறுதல்கள் மாத்திரம் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.*

*(4) இப்பிரிவின் நோக்கத்திற்காக -*

*''வீடமைப்பு'' என்பது, அத்தகைய உறுப்பினரால் -*

*(அ) உறுப்பினரொருவருக்கு சொந்தமான காணியொன்றில் வீடொன்றை நிர்மாணித்தல் ;*

*(ஆ) வீடொன்றின் நிர்மாணத்திற்கென காணியொன்றைக் கொள்வனவு செய்தல் ;*

*(இ) வீடொன்றைக் கொள்வனவு செய்தல் ;*

(ஈ) வீடமைப்பு ஆதனம் மீதான ஈடொன்றை மீட்டல் ; அல்லது

(உ) அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடமிருந்து பெறப்பட்ட வீடமைப்பு கடனின் செலுத்தப்படாத நிலுவையொன்றைக் கொடுத்துத்தீர்த்தல்,

என்பவற்றை உள்ளடக்கும் ; அத்துடன்

“மருத்துவ சிகிச்சை” என்பது

(அ) இருதய சத்திரசிகிச்சை ;

(ஆ) மாற்றுப்பாதை சத்திரசிகிச்சை ;

(இ) சத்திரசிகிச்சை உள்ளடங்கலாக புற்றுநோய்க்கான சிகிச்சை ;

(ஈ) சிறுநீரக மாற்று சிகிச்சை அல்லது சத்திரசிகிச்சை ;

(உ) தாயின் வயிற்றிலிருந்து குழந்தையை வெளிப்படுத்தும் சத்திரசிகிச்சை ; அல்லது

(ஊ) விபத்தொன்றின் காரணம்மீது பதின்னான்கு நாட்களுக்குக் குறையாத நாட்களுக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப் பெற்றிருத்தல்,

என்பவற்றை உள்ளடக்கும்.

(5) நிதியத்தின் உறுப்பினரொருவர், அவரது வாழ்க்கைத்துணை மற்றும் அவரது பிள்ளைகள் இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மருத்துவ சிகிச்சைக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப் படும் கட்டளைமூலம் (1) ஆம் உட்பிரிவின் (i) ஆம் உட்பந்தியின் அல்லது (ii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு கொண்டுவருகின்ற மைக்கென வேறுபட்ட தேதிகளை நியமிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 24 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தில் 24 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

"*காப்புறுதி அல்லது ஓய்வூதியத் திட்டம்.*

24அ. (1) ஆணையாளர் தலைமையதிபதி, நிதிய உறுப்பினர்களின் நலனிற்கென விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய காப்புறுதித்திட்ட மொன்றை அல்லது ஓய்வூதியத் திட்டமொன்றைத் தாபிக்கலாம்.

(2) காப்புறுதித் திட்டத்தில் அல்லது ஓய்வூதியத் திட்டத்தில் அல்லது இரண்டிலும் இணைய விரும்பு கின்ற நிதியத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் விதித்துரைக்கப்பட்ட தொகையை உதவுத்தொகை யாக செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ ஆம் பிரிவு " ஒரு சதவீத வீதத்திலான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு சதவீத வீதத்திலான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 31 ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 31ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"*விபரத் திரட்டுகளை கொடுத்துதவு தற்கான கடமை.*

31ஆ. தனது தொழிலில் குறைந்தபட்சம் ஐம்பது ஊழியரைக் கொண்டுள்ள ஒவ்வொரு தொழில் தருநரும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்கள் அடங்கியுள்ள மாதாந்த

விபரத்திரட்டொன்றை மத்திய வங்கிக்கான பிரதி யொன்றுடன் அடுத்துவரும் மாதமுடிவிற்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் அவரது கடமையாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு "ஓராயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம்", "ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு" மற்றும் "ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம்", "பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கு" மற்றும் "ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ங) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை பதிலிடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :-

"(ஙங) வீடமைப்பு நலனுதவிகள் வழங்குவதில் பின்பற்றப் பட வேண்டிய நடவடிக்கைமுறை தொடர்பிலும் மருத்துவ சிகிச்சைக்கான நலனுதவிகள் தொடர்பிலும் ;".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்